நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெங்காய சாகுபடிக்கு ஏற்ற தருணம் எது?**

First Published : 25 Aug 2011 04:07:08 AM IST



விழுப்புரம்: ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வெங்காயம் பயிரிட்டால் நல்ல மகசூல் பெறலாம் என்று வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை பெற்றுத்தருவதால் பெரிய வெங்காயம் என்று அழைக்கப்படும் பெல்லாரி வெங்காயம் ஒரு முக்கியமான காய்கறி பயிராக உள்ளது. நமது நாட்டில் வெங்காயம் பல்வேறு சீதோஷ்ண நிலைகளில் பல்வேறு பருவங்களில் பயிரிடப்படுகிறது.

நமது நாட்டில் தற்போதைய உற்பத்தி ஹெக்டேருக்கு 10 முதல் 12 டன்கள் மட்டுமே. வெங்காயத்தில் அதிக உற்பத்திக்கு நாற்றங்கால் மற்றும் நடவு வயல்களில் சிறந்த மேலாண்மை முறைகளுடன் அதிக மகசூல் தரவல்ல ரகங்களை தக்க பருவங்களில் சாகுபடி செய்வதே தீர்வாக உள்ளது.

பருவம்: தென்னிந்தியாவைப் பொறுத்த வரையில் மே, ஜூன் (கரீப் பருவம்) மாதங்களிலும் மற்றும் ஆகஸ்ட், செப்டம்பர் (ரபி பருவம்) மாதங்களிலும் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. எனினும் குளிர் கால வெங்காய பயிர்களில்தான் சிறந்த மகசூல் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ரகங்கள்: தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மூலம் பல்வேறு ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்கள் வெளியிட்டிருப்பினும் அடர் சிகப்பு ரகங்களில் என் - 53, அக்ரிபவுன்ட், வெளிர்

சிகப்பு ரகங்களில் பூசா சிகப்பு, என்-2-4-1, அக்ரிபவுன்ட் ஆகியவை முக்கிய ரகங்களாக சாகுபடியில் உள்ளன.

பொதுவாக பெல்லாரி வெங்காயம் 125 முதல் 140 நாள்கள் வயதுடையதாகும். இதற்கு நல்ல வடிகால் வசதியுள்ள சமமான, வளம் நிறைந்த மண் தேவைப்படுகிறது. மண்ணின் கார அமிலத் தன்மை 7 முதல் 7.6 வரை இருக்க வேண்டும். தண்ணீர் தேங்கும் களிமண் நிலங்களை வெங்காய சாகுபடிக்கு தவிர்ப்பது நல்லது.

விதை ஹெக்டேருக்கு 5 முதல் 6 கிலோ. நாற்றங்கால் ஒரு ஹெக்டேருக்கு தேவைப்படும் நாற்றுகளை உற்பத்தி செய்ய 7.5 மீ. நீளம், 1 மீ. அகலம், 15 செ.மீ. உயரம் கொண்ட மேட்டுப்பாத்தி தேவைப்படும். தோட்டக்கலைத் துறையின் அறிவுரையின்படி உரங்கள் முறையாக பயன்படுத்தினால் 6 முதல் 8 வாரங்களில் நடவுக்கு தயாராகிவிடும். நடவுக்குப் பின் 4 முதல் 6 நாள்களுக்கு ஒரு முறை மண்ணின் ஈரத்திற்கு ஏற்றவாறு நீர் பாய்ச்ச வேண்டும்.

வெங்காய பயிரினை இலைப்பேன் மற்றும் இலைக்கருகல் மற்றும் பியூசேரியம் தண்டு அழுகல் மற்றும் வெங்காய அழுகல் போன்ற நோய்கள் பெருமளவில் தாக்கி சேதம் ஏற்படுத்துகிறது. இவற்றிற்கு தோட்டக்கலைத் துறை அலுவலர்களின் ஆலோசனையின்படி மருந்து தெளித்து பாதுகாக்கலாம்.

பெல்லாரி வெங்காய சாகுபடி குறித்து விழுப்புரம் தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் கூறியது:

கோலியனூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட விவசாயிகள் பிடாகம், மரகதபுரம், சுந்தரிபாளையம், நல்லரசன்பேட்டை ஆகிய கிராமங்களில் பெல்லாரி வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர்.

விவசாயிகள் நாற்றுவிட்டது மற்றும் நடவு செய்த காலம் முதல் வெங்காய பயிரினை கவனமாக கவனித்து வரவேண்டும். அதில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் அதுகுறித்து சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள தோட்டக் கலை அலுவலர்களை அனுகி விவரம் பெற்று பயன்பெறலாம்.

மேலும் இந்த மாவட்டத்தில் உள்ள கோலியனூர், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், மயிலம், சங்கராபுரம், ரிஷிவந்தியம், சின்னசேலம், திருக்கோவிலூர் ஒன்றியங்களிலுள்ள விவசாயிகள் ஹெக்டருக்கு ரூ.7,500 மதிப்பில் 19:19:19 நீரில் கரையும் உரங்கள், இமிடாகுளோபிரீட், கார்பன்டாசிம் மற்றும் மான்கோசெப், சூடோமோனாஸ், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் நுண்ணுரங்கள் போன்ற இடு பொருள்களை 50 சதவீத மானிய விலையில் உயர் தொழில் நுட்பத்தில் வெங்காய சாகுபடி திட்டத்தின் கீழ் பெற்று பயன்பெறலாம் என்று தெரிவித்தார்.

**சம்பா சாகுபடி விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 25 Aug 2011 04:07:38 AM IST

செஞ்சி: தற்போது சம்பா பயிர் செய்யத் தகுந்த மழை பெய்து வருவதால் சம்பா பருவத்திற்கேற்ற மே.வெ.பொன்னி, பொன்மணி, கோ.-43, கோ-45, ஏ.டி.டி-38, ஏ.டி.டி.-39, ஏ.டி.டி.-44 ஆகிய நெல் ரகங்களை விவசாயிகள் பயிர் செய்யலாம்.

இது குறித்து வேளாண் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விதை நேர்த்தி: கார்பென்டாசிம்- 2 கிராம் அல்லது ட்ரைசைக்ளோசோல் 2 மி.லி 1 கிலோ விதைக்கு கலந்து 10 மணி நேரம் ஊரவைத்திருந்து பின்பு விதைக்கவும். இவ்வாறு செய்வதால் தோகை எரிப்பு நோயிலிருந்து பாதுகாக்கலாம்.

உயர் பூஞ்சாண கொல்லி நேர்த்தி: சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 10 கிராம் 1 கிலோ விதைக்கு கலந்து பின்னர் விதைக்கவும். இதன் மூலம் நெல் குலை நோயின் பாதிப்பினை தவிர்க்கலாம்.

உயர் உர நேர்த்தி: அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியா 12 கிராம் 1 கிலோ விதைக்கு கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருந்து பின்னர் விதைக்கவும்.

திருந்திய நெல் சாகுபடி-11 தொழில் நுட்பங்கள்: 1. தரமான சான்று பெற்ற உயிர் விளைச்சல் அல்லது வீரிய ஓட்டு நெல் ரகங்களைப் பயன்படுத்த வேண்டும்.

2. ஒரு ஏக்கர் நடவு செய்ய 2 கிலோ விதை தேவை.

3. ஒரு ஏக்கர் நடவு செய்ய 40 சதுர மீட்டர் (1 சென்ட்) நாற்றங்கால் தேவை.

இதன் மீது பாலிதீன் விரிப்புகளை பரப்பி மரச் சட்டங்கள் வைத்து மேட்டுப் பாத்திகள் அமைத்து அதில் மண் மற்றும் தொழு உரம் நிரப்பி விதைக்க வேண்டும்.

4. 10-14 நாட்கள் வயதான நாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.

5. நடவு வயல் துல்லியமாகச் சமன் செய்யப்பட வேண்டும்.

6. இடைவெளிக்கு மார்க்கர் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

7. 22.5 செ.மீ ல 22.5 செ.மீ இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

8. குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

9. நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீக்கு அதிகமான நீர் நிறுத்தக்கூடாது.

10. கோனோவிடர் -களையெடுக்கும் கருவியைக்கொண்டு களை எடுக்க வேண்டும். நடவு செய்த 10-ம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை வீதம் நான்கு முறை களை எடுக்க வேண்டும்.

11. இலை வண்ண அட்டையப் படுத்தி தேவையான தழைச்சத்தினை மேல் உரமாக இட வேண்டும்.

**தமிழக வேளாண் திட்டப் பணிகளுக்கு ரூ.533 கோடி நிதி!**

First Published : 25 Aug 2011 04:47:00 AM IST

கோவை, ஆக.24: தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அறுவடைக்குப் பிந்தைய உணவு பதப்படுத்துதல் தொழில் மையம், வேளாண் தகவல் விவரத் தொகுப்பு மையம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு மத்திய திட்ட குழுவிடம் ரூ.533.40 கோடி நிதி கோரப்பட்டுள்ளது.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 12-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய திட்டக் குழுவிடம் அளித்துள்ள திட்ட வரைவு அறிக்கை விவரம்:

வேளாண் தொழிலில் நிலவும் ஆள்பற்றாக்குறை போன்ற காரணங்களால் இயந்திரமயமாக்கல் முக்கியத்துவம் பெறுகிறது. மாநிலத்தில் உள்ள 36 ஆராய்ச்சி நிலையங்களுக்கு இயந்திரங்களை வாங்கி விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்க ரூ.8 கோடி நிதி வேண்டும்.

வேளாண் ஆராய்ச்சி மையங்களை நவீனமயமாக்கல் செய்வதற்கு ஒவ்வொரு ஆராய்ச்சி மையங்களுக்கு ரூ.10 கோடி நிதி வேண்டும்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் அளிக்கும் நிதி மூலமே பல்கலைக்கழகத்தில் ஆய்வகங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படுகின்றன.

எனவே மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வெளிநபர்களுக்கு பயனுள்ள வகையில் நவீன உபகரணங்கள் வாங்க ரூ.25.04 கோடி வேண்டும்.

தொலைதூரக் கல்வி இயக்ககம் சார்பில் விவசாயிகளுக்கு பி.எஃப்.டெக் பட்டப் படிப்பு வழங்கப்படுகிறது. இதில் 6 செமஸ்டர்களுக்கு ரூ.45,000 கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

முதற்கட்டமாக 5 ஆயிரம் விவசாயிகள் 50 சதவீத தொகையில் (ரூ.22,500) பி.எஃப்.டெக் பட்டப் படிப்பை முடிக்க ரூ.11.25 கோடி வேண்டும்.

உணவு மற்றும் வேளாண் பயிர்களின் மரபணு வங்கியை மேம்படுத்த ரூ.2.93 கோடி வேண்டும்.

அறுவடைக்குப் பிந்தைய உணவுப் பதப்படுத்துதல் தொழில் மையம்: நாட்டில் அறுவடைக்குப் பிந்தைய உணவுப் பொருள் இழப்பு ரூ.70,000 கோடி. இதைத் தடுக்கும் வகையில் மாவட்ட வாரியாக அறுவடைக்குப் பிந்தைய உணவுப் பதப்படுத்துதல் தொழில் மையங்களை' ஏற்படுத்தி அதன் மூலம் உள்ளூர் விவசாயிகள் தங்களது வேளாண் பொருள்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களை தயாரிக்க முடியும்.

இம்மாதிரி மையங்களை தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க ரூ.155.46 கோடி நிதி வேண்டும்.

அதேபோல, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமம் மற்றும் வட்டாரங்களில் நில வளங்களைக் கண்டறிதல் போன்றவற்றின் புவி தகவல் வரைபடம் (ஜி.ஐ.எஸ்.) தயாரிக்க ரூ.2.84 கோடி வேண்டும்.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் விதைச் சான்று அளித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக ரூ.107.58 கோடி நிதி வேண்டும்.

பருவநிலை மாறுபாடு மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் உணவுப் பாதுகாப்பு நிலையை அடைய 4 கோடி நிதி வேண்டும்.

தமிழ்நாடு வேளாண் தொழில் தொடர்பான தகவல் புள்ளி விவரத் தொகுப்பு மையத்தை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு ரூ.5.80 கோடி வேண்டும்.

அறிவுசார் சொத்துரிமை மையத்தை நிறுவ ரூ.7.74 கோடி நிதி வேண்டும்.

வேளாண் வர்த்தகச் சந்தை விலை நிலவரப் பிரிவு: வேளாண் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் விளை பொருள் குறித்த விலை நிலவரங்களை விவசாயிகளுக்குத் தெரியபடுத்தும் வகையில், இந்திய வேளாண் வர்த்தகச் சந்தை விலை நிலவரப் பிரிவு ஏற்படுத்த வேண்டும்.

இதை நாடு முழுவதும் விரிவுபடுத்த ரூ.100 கோடி வேண்டும்.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மண்டல அளவிலான பயோடெக்னாலஜி ஆய்வகத்தை தொடங்க ரூ.31.62 கோடி வேண்டும். மாணவிகளுக்கு விடுதி கட்ட ரூ.18 கோடி வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த திட்ட வரைவு அறிக்கை, மத்திய திட்டக்குழுவின் ஆலோசகர் சதாம் வதே, உறுப்பினர் கஸ்தூரி ரங்கன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேச பூபதி தெரிவித்தார்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடக்கம்**

First Published : 24 Aug 2011 05:07:13 PM IST

திருநெல்வேலி, ஆக. 23: கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயைத் தடுக்க தடுப்பூசி போடும் பணி தொடங்கியுள்ளதாக, ஆட்சியர் இரா. செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கால்நடைகளை கோமாரி நோய் தாக்கும் அபாயம் உள்ளது. நோய் அறிகுறியாக உமிழ்நீர் வடிதல், ஈறு, நாக்கு, கால் குளம்புகளில் புண்கள் ஏற்படும். அதிகக் காய்ச்சல், தீவனம் உண்ணாதது போன்றவை அறிகுறிகள்.

இந்நோய் காற்று மூலம் வேகமாக பரவும். நோய் பாதித்த கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், சாணம், பால் ஆகியவை மூலம் நோய் பரவும். நோயுற்ற கால்நடைகளுக்குப் பயன்படுத்திய பாத்திரங்கள், தீவனங்கள், தண்ணீர் மூலமாகவும் பரவும். இந் நோய் பரவாமல் தடுக்க 6 மாதங்களுக்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும். நோய் பாதிக்க கால்நடைகளை தனியாக பராமரிக்க வேண்டும். நோய்பாதித்த இடங்களில் இருந்து கால்நடைகளை வாங்கக்கூடாது.

ஆண்டுக்கு இருமுறை தடுப்பூசி போடவேண்டும். கடந்த காலங்களில் தடுப்பூசி போடப்பட்டதால், 3 ஆண்டுகளாக கோமாரி நோய் தாக்கவில்லை.

விரிவுப்படுத்தப்பட்ட கோமாரி நோய் தடுப்புத் திட்டம் மூலம் இம் மாவட்டத்தில் இலவச தடுப்பூசி போட வட்டார அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவினர் செவ்வாய்க்கிழமைமுதல் ஒவ்வொரு கிராமத்திலும் காலை நேரத்தில் தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்வர்.

எனவே, கால்நடை வளர்ப்போர் தடுப்பூசி போட்டு தங்கள் கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

**ரூ. 5.70 லட்சத்துக்கு தென்னங் கருப்பட்டி விற்பனை**

First Published : 24 Aug 2011 03:11:57 PM IST

கோபி, ஆக.23: குன்னத்தூர் கூட்டுறவு கருப்பட்டி சம்மேளனத்தில் ரூ.5.70 லட்சத்துக்கு தென்னங் கருப்பட்டி விற்பனை செய்யப்பட்டது.

இங்கு வாரந்தோறும் திங்கள்கிழமைகளில் ஏலம் மூலம் கருப்பட்டி விற்பனை செய்யப்படுகிறது. கோபி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள், கருப்பட்டியை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

15 ஆயிரம் கிலோ விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தது. 10 கிலோ கொண்ட ஒரு மனு ரூ.380க்கு விலை போனது. பனங் கருப்பட்டி உற்பத்தி இல்லாததால் விற்பனைக்கு கொண்டு வரப்படவில்லை.

---

**மக்காச்சோளத்துக்கு "கிராக்கி'பல்லடத்தில் சாகுபடி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2011,01:43 IST

பல்லடம் : மானாவரி பயிர் மக்காச்சோளத்துக்கு மார்க்கெட்டில் தொடர்ந்து கடும் "கிராக்கி' நிலவுவதால் பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் தீவிரமாக உள்ளனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் 5,000 கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. கறிக்கோழிகளுக்கான தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளத்தின் பங்கு 50

முதல் 60 சதவீதமாக உள்ளது. கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க மக்காச்சோளம் அதிகம் தேவைப்படுவதால் மக்காச்சோளத்தின் தேவை, உள்ளூர் மார்க்கெட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது; விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். உள்ளூர் மக்காச்சோளம் முழுமையாக கொள்முதல் செய்தது போகவும், கறிக்கோழிகளுக்கு மக்காச்சோளம் தேவைப்படுவதால் பல்லடம் பகுதியில் உள்ள கறிக்கோழி உற்பத்தியாளர்கள், பண்ணையாளர்கள் தங்களின் தேவைக்கு ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து தினமும் லாரிகள் மூலம் 80 லோடுகள் வரை மக்காச்சோளம் கொள்முதல் செய்து வருகின்றனர். கடந்த ஐந்து மாதங்களுக்கு முன் மக்காச்சோளம் கொள்முதல் விலை 100 கிலோ மூட்டை ஒன்றுக்கு 1,000 ரூபாயாக இருந்தது; இவ்விலை விவசாயிகளுக்கு அதிக லாபம் தரவில்லை; கடந்த மூன்று மாதங்களாக மக்காச்சோளம் கொள்முதல் விலை மூட்டை ஒன்றுக்கு 1,250 முதல் 1,300 ரூபாய் வரை இருந்து வருகிறது; கட்டுபடியான விலையாக உள்ளதால் பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் உள்ள விவசாயிகள், மானாவாரி பயிரான மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**கொப்பரை கொள்முதல் விலையை உயர்த்த கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2011,01:43 IST

பல்லடம் : தேங்காய் பறிப்பு கூலி உயர்வு, உடைப்பு கூலி செலவு அதிகரித்து வருவதால், கொப்பரை கொள்முதல் விலையை 75 ரூபாயாக அரசு உயர்த்த வேண்டும் என, பல்லடம் பகுதியில் கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காப்பாற்ற அரசு, கொப்பரைக்கு ஆதார விலை நிர்ணயம் செய்து கொள்முதல் மையங்கள் அமைத்து கொப்பரைகளை கொள்முதல் செய்து வருகிறது; தமிழகத்தில் பல்லடம், பொள்ளாச்சி, உடுமலை, செஞ்சேரி உட்பட 10 இடங்களில் கொப்பரை கொள்முதல் மையங்கள் உள்ளன. கடந்த இரண்டரை ஆண்டுகளாக கொப்பரை கொள்முதல் மையத்தில் ஒரு கிலோ கொப்பரை 44 ரூபாய் 50 காசுக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது; காங்கயம், வெள்ளகோவில் வெளிமார்க்கெட்டில் கொப்பரை கொள்முதல் விலை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அரசு கொள்முதல் மையங்களின் விலையை விட, கூடுதலாகவே உள்ளது.தற்போது வெளிமார்க்கெட்டில் அரசு கொப்பரை கொள்முதல் மையம் விலையை விட கிலோவுக்கு 18 ரூபாய்க்கு குறைவில்லாமல் கூடுதலாக கிடைக்கிறது. ஒரு சில நேரங்களில் மட்டும் கிலோவுக்கு இரண்டு ரூபாய், கூடுதலாகவோ குறைவாகவோ உள்ளது. வெளிமார்க்கெட் கொள்முதல் விலை கூடுதலாக உள்ளதால், கொப்பரை உற்பத்தி விவசாயிகள் அரசு கொள்முதல் நிலையங்களுக்கு கொப்பரைகளை விற்பனை செய்யாமல், வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர். இதனால் பல்லடம், செஞ்சேரி கொள்முதல்

மையங்களுக்கு கொப்பரை கொள்முதலுக்கு வந்து ஓராண்டுக்கு மேல் ஆகிறது; கடந்தஇரண்டு ஆண்டுகளில் தேங்காய்பறிப்பு செலவு 30 சதவீதம் அதிகரிப்பு, தேங்காய் உடைப்பு கூலி 15 சதவீதம் உயர்ந்துள்ளதால், கொப்பரை கொள்முதல் விலையை 44 ரூபாய் 50 காசில் இருந்து 75 ரூபாயாக அரசு, உயர்த்தி வழங்க வேண்டும் என, பல்லடம் பகுதியில் உள்ள கொப்பரை உற்பத்தி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பருத்தி சாகுபடி வழிகாட்டுதல் இல்லை :விவசாயிகள் குழப்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2011,01:38 IST

உடுமலை : பருத்தி சாகுபடி குறித்து வேளாண்துறையினர் எவ்வித வழிகாட்டுதலும் அளிக்காததால், சாகுபடிக்கான முதற்கட்ட பணிகளை துவக்கிய உடுமலை பகுதி விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக பி.ஏ.பி., பாசனத்தில் உடுமலை விவசாயிகள் பருத்தி பயிரிட்டு வருகின்றனர். கடந்த இரண்டு சீசன்களில் மட்டும் விருகல்பட்டி, புதுப்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் மட்டும் ஆயிரம் ஏக்கர் வரை பருத்தி பயிரிடப்பட்டது. நீண்ட இழை பி.டி., ரக பருத்தியை விவசாயிகள் பயிரிட்ட நிலையில் பருத்திக்கு நல்ல விலை கிடைத்தது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு பருத்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டினர். காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணிகள் நடந்ததால், திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது தாமதமானது. வழக்கமாக ஆக., மாதம் தண்ணீர் திறக்கப்படுவதால், பருத்தி அம்மாத துவக்கத்திலேயே நடவு செய்யப்பட்டு; செடிகளின் வளர்ச்சி தருணத்தில் பருவமழை கிடைக்கும். இம்முறை நான்காம் மண்டல பாசனம் செப்.,1ல் துவங்குகிறது. கடந்த வாரம் உடுமலை பகுதியில் பெய்த மழையை அடிப்படையாக கொண்டு விவசாயிகள் பருத்தி சாகுபடி பணிகளை துவக்கினர். ஒரு சில பகுதிகளில் விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

நல்ல விளைச்சல் மற்றும் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தற்போது அனைத்து விவசாயிகளும் பி.டி., பருத்தியை நடவு செய்துள்ளனர். நூற்றுக்கணக்கான விவசாயிகள் இவ்வகை விதைகளை வாங்கி பாசன தண்ணீர் திறப்பின் போது நடவு செய்ய இருப்பு வைத்துள்ளனர். இந்நிலையில், தமிழக அரசு பி.டி., பருத்திக்கு தடை விதிக்கப்படும் என சட்டசபையில் அறிவித்தது. இதனால், நடவு செய்த விதைகளை பயன்படுத்தி சாகுபடியை தொடரலாமா என்பது தெரியாமல் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். விவசாயிகள் தரப்பில் பருத்தி சாகுபடி குறித்து பல்வேறு பிரச்னைகள் நிலவி வரும் நிலையில் வேளாண்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் சாதித்து வருகின்றனர். விவசாயிகள் தரப்பில், பி.டி., பருத்தி சாகுபடி குறித்து அரசின் அறிவிப்பை வேளாண்துறையினர் உரிய விளக்கம் அளித்து வழிகாட்டுதல்களை தெரிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து வேளாண்துறையினர் கூறுகையில், "பருத்தி சாகுபடி குறித்து துறை ரீதியாக எந்த உத்தரவும்

அரசிடமிருந்து பெறப்படவில்லை. உத்தரவு வந்ததும் அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### 9.5 சதவீத வளர்ச்சி இலக்கை எட்ட

# விவசாயம், உற்பத்தி துறைகளின் வளர்ச்சி அதிகரிக்க வேண்டும்

## மத்திய திட்டக் குழு ஆலோசனை

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

எதிர்வரும் பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) நாடு 9.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டுமானால் விவசாயம் மற்றும் உற்பத்தி துறைகளின் வளர்ச்சி உத்வேகம் பெறவேண்டும் என பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான முழு மத்திய திட்டக் குழு ஆலோசனை தெரிவித்துள்ளது.

### வரைவு ஆய்வறிக்கை

பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்த வரைவு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் இதர பல துறைகளின் அபார செயல்திறன் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகபட்ச வளர்ச்சி காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்கு 9 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும் பிரதமர் மன்மோகன் சிங் வளர்ச்சி இலக்கை 9.2 சதவீதமாக உயர்த்துவதற்கான சாத்தியம் உள்ளது என கூறியுள்ளார். 9.5 சதவீத வளர்ச்சியை அடைய வேண்டுமானால் விவசாய துறையின் உற்பத்தி வளர்ச்சி இலக்கை 4.2 சதவீதமாக அதிகரிக்க வேண்டியிருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2002–2007) விவசாய உற்பத்தியை 4 சதவீதம் அதிகரிக்க மத்திய திட்டக் குழு இலக்கு நிர்ணயம் செய்திருந்தது. எனினும் 2.3 சதவீத வளர்ச்சிதான் காண முடிந்தது. நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண் துறையின் உற்பத்தி வளர்ச்சி 3.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



உற்பத்தி துறைகளின் உற்பத்தி நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் 8.3 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகபட்ச வளர்ச்சி காண, 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இதனை 11.5 சதவீதமாக உயர்த்த வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### மின்சாரம், எரிவாயு

விவசாயம், உற்பத்தி ஆகிய துறைகளுக்கு அடுத்தபடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய துறைகளுள் மின்சாரம், எரிவாயு மற்றும் குடிநீர் சப்ளை ஆகியவையும் உள்ளன. இந்த இரண்டு துறைகளின் வளர்ச்சியை 9 சதவீதமாக உயர்த்த வேண்டியிருக்கும் என மத்திய திட்டக் குழு தெரிவித்துள்ளது. 2012 மார்ச்சுடன் நிறைவடையும் 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மின்சாரம் மற்றும் எரிவாயு–குடிநீர் ஆகிய துறைகளின் வளர்ச்சி ஒட்டுமொத்த அளவில் 6.4 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இந்த வளர்ச்சி விகிதம் 6.8 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# வேளாண்மை செய்திகள்

## விளைச்சலை அதிகரிக்க உதவும் நவீன கருவிகள்

வேளாண்மையில் பயிர் விளைச்சலை அதிகரிக்க இன்றைய சூழலில் தீவிர சாகுபடி தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. நெல் சாகுபடியில் தொன்று தொட்டு கடைப்பிடித்து வரும் நாற்று நடும் முறையில் அதிக நாற்றுகளை நடுவதால் பயிரின் வளர்ச்சி குறைந்து, விளைச்சலும் குறைகிறது. பருவத்தில் பயிர் செய்து நெல் பயிரை விளைவிக்க தேவையான பண்ணை பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதால் எந்திரங்களின் உதவியை விவசாயிகள் நாடுகிறார்கள்.



### நேரடி நெல் விதைப்பு கருவி

நன்செய் நில நெல் சாகுபடியில் நேரடியாக விதைத்தலும், நாற்று விட்டு நடவு செய்வதும் நடைமுறையில் இருந்து வரும் வழக்கமாகும். நெல் நாற்று நடுவதற்கு அதிகமான பண்ணையாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கான செலவும் அதிகம். நாற்றுகளை நடுவதற்கு பதிலாக முளை கட்டிய நெல் விதைகளை சேற்று வயல்களில் நேரடியாக விதைக்கும் உத்தி இன்று உழவியல் வல்லுனர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கருவியில் 4 உருளை வடிவ விதைப்பெட்டிகள் உள்ளன. இந்த விதைப்பெட்டிகளில் 150 மி.மீ. இடைவெளியில் 2 வரிசைகளில் துளைகள் போடப்பட்டு உள்ளன. கருவியின் நடுவில் 600 மி.மீ. விட்டமுள்ள சக்கரம் ஒன்று பொருத்தப்பட்டு உள்ளது.

### பராமரிப்பு செலவு

இந்த கருவியை ஒருவர் இழுத்து செல்லும் வகையில் கைப்பிடி ஒன்றும் உள்ளது. சேற்று வயல்களில் எளிதாக இழுத்து செல்வதற்கு ஏற்ப 2 வழுக்கு தகடுகள் உள்ளன. இந்த கருவி நிலங்களில் முளை கட்டிய நெல் விதைகளை வரிசைகளில் விதைப்பதற்கு பயன்படுகிறது.

இத்தகைய விதைப்பதால் நாற்றங்கால் பராமரிப்பு செலவு குறைவதோடு 10 முதல் 15 நாள்கள் முன்னதாகவே பயிர் அறுவடைக்கு வந்துவிடுகிறது. இந்த கருவியை கொண்டு நாள் ஒன்றுக்கு 1 எக்டேர் பரப்பில் நேரடி விதைப்பு செய்யலாம். நாற்று நடவு தவிர்க்கப்படுவதால் பணியாளர் கூலி பெருமளவில் குறைகிறது. வரிசைகளில் களை எடுப்பது எளிது.

### தக்கைப்பூண்டு விதைப்பு கருவி

இந்த கருவியினால் எக்டேருக்கு 80 கிலோ என்ற அளவிலும், தக்கைப்பூண்டு எக்டேருக்கு 30 கிலோ என்ற அளவிலும் சேற்று வயலில் விதைக்கப்படுகின்றன. இந்த கருவி வரிசைக்கு வரிசை 12.5 செ.மீ. இடைவெளியில் 3 நெல் வரிசைகளையும், 3 தக்கைப்பூண்டு வரிசைகளையும் அடுத்தடுத்து விதைக்கிறது. 2 பணியாளர்களை கொண்டு இந்த கருவியால் நாள் ஒன்றுக்கு 1 எக்கருக்கு விதைக்கலாம்.

விதைத்த 5 வாரங்களில் எக்டேர் ஒன்றுக்கு 7 ஆயிரம் கிலோ எடையுள்ள பசுந்தாள் உரம் வயலுக்கு கிடைக்கிறது. பசுந்தாள் உரப்பயிர் 35 முதல் 40 செ.மீ. உயரம் வளர்ந்தவுடன் நீண்ட கைப்பிடியை கொண்ட கருவியை கொண்டு சேற்றில் மிதித்துவிடலாம். அதே சமயம் களைகளும் எடுக்கப்பட்டு விடுகின்றன.

### நாற்று நடும் கருவி

கைகளால் இயக்கப்படும் 5 வரிசைகளில் நாற்று நடும் கருவியானது, 5 நாற்றுப்பாய்களை, சாய்வான நாற்று கலன், நாற்றை பாயில் இருந்து எடுக்கும் முள், இரும்பு கைப்பிடி, கருவியை சுமக்கும் 2 மிதவைகள், நாற்றுக்கலன் 2 திசைகளிலும் மாறிமாறி நகரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

நாற்றுகள் முட்களால் பிரிக்கப்படும் போது இந்த கலன் தானாக நகரும். நாற்று இடுக்கியை இயக்குவது கைப்பிடியே ஆகும். கருவியை முன்னின்று இழுத்து செல்பவர் கைப்பிடியை கீழ்நோக்கி கொண்டு செல்லப்பட்டு இறுதியில் சேற்றில் நடுகிறது. இதுபோன்ற நவீன கருவிகள் தான் இன்றைய வேளாண் தொழிலில் பணியாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும், விளைச்சலை அதிகரிக்கவும் விவசாயிகளுக்கு பேருதவி புரிகிறது.

**–தகவல்: தனஞ்செழியன், ரதிக்கண்ணு, சுரேந்திர குமார், பண்ணை எந்திரவியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.**

---

## சீரான பயிர் வளர்ச்சிக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் அவசியம்

### வேளாண்மை அதிகாரி அறிவுரை

ஊத்துக்குளி அருகே உள்ள குன்னத்தூரில் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிப்பது குறித்து செயல்விளக்க முகாம் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் கே.அரசப்பன் கலந்து கொண்டு நிலக்கடலை சாகுபடி குறித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பொதுவாக இறவை பயிராகவும், மானாவாரி பயிராகவும் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் இறவை பயிரை விட மானாவாரி நிலக்கடலை அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இறவை நிலக்கடலையை மார்கழி பட்டத்திலும், மானாவாரி நிலக்கடலையை ஆடிப்பட்டத்திலும் சாகுபடி செய்யலாம். இறவை மற்றும் மானாவாரிக்கு கோ.1, வீ.ஆர்.ஐ.2, வீ.ஆர்.ஐ.3, டி.எம்.வி.7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும்.

### கோடை மழையைக் கொண்டு

நிலக்கடலை சாகுபடி செய்ய மணற்பாங்கான வண்டல், செம்மண், கருமண் நிலங்கள் ஏற்றவை. 3 அல்லது 4 முறை இரும்பு கலப்பை அல்லது நாட்டுக்கலப்பை கொண்டு சரிவுக்கு குறுக்காக கட்டிகள் உடையும் வரை உழவு செய்து நிலத்தை தயார் செய்ய வேண்டும். மானாவாரி நிலங்களில் நிலக்கடலை சாகுபடிக்கு முன்பாக சித்திரை, வைகாசி மாதங்களில் பெறப்படும் கோடை மழையை கொண்டு உழவு செய்ய வேண்டும். சரிவுக்கு குறுக்காக உழவு செய்வதன் மூலம் மழைநீர் ஓடி வீணாகாமல் மண்ணில் சேமிக்கப்படுகிறது. சிவப்பு கம்பளி புழுக்களின் கூட்டுப்புழுக்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது.

மண் பரிசோதனை அடிப்படையில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்தை இட வேண்டும். மண் பரிசோதனை செய்யா விட்டால் மானாவாரி நிலத்துக்கு 4:4:18 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து தரக் கூடிய ரசாயன உரங்கள் இட வேண்டும். இறவை பயிருக்கு 7:14:21 தழை, மணி, சாம்பல் சத்து தரக் கூடிய ரசாயன உரங்கள் இட வேண்டும்.

### தொழுஉரம்

மானாவாரி பருவம் விதைப்பு தொடங்குவதற்கு முன்பாக மானாவாரி நிலங்களில் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்து வைத்திருந்து விதைப்பின் போது இடலாம். ஒரு எக்கருக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க ஒரு வண்டி நன்கு மக்கிய தொழு உரத்துடன் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 30 கிலோ பொட்டாஸ் நன்கு கலந்து மூட்டம் போட்டு வைத்திருக்க வேண்டும். மூட்டத்தில் காற்று புகா வண்ணம் மெழுகி வைத்திருக்க வேண்டும்.

பின்னர் விதைப்பின் போது மூட்டத்தை உடைத்து அதில் 11 கிலோ யூரியாவை கலந்து ஒரு எக்கருக்கு சீராக தூவி விதைப்பு செய்யலாம். ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் மூலம் பயிர் வறட்சியை தாங்கி வளர்கிறது. சூப்பர் பொட்டாஸ் உரங்கள் மண்ணில் நிலைத்து நின்று பயிருக்கு வளர்ச்சியை ஊக்குவித்து மகசூலை அதிகரிக்க செய்யும். பயிரின் வளர்ச்சி சீராக இருக்கவும், ஊட்டமேற்றிய தொழு உரம் உதவுகிறது.

### விதை நேர்த்தி

மானாவாரி மற்றும் இறவை பயிருக்கு ஏக்கருக்கு பொதுவாக 55 கிலோ விதை பருப்பு தேவைப்படும். பொதுவாக மானாவாரி பகுதியில் டிராக்டர் மூலம் விதைப்பு செய்யும் கருவி கொண்டு விதைப்பு செய் யவும். செடிகளின் வரிசைகளுக்கு இடையே 30 செ.மீட்டரும், செடிகளுக்கு இடையே 10 செ.மீட்டரும் இடைவெளி இருக்க வேண்டும்.

ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடியை கலந்து, விதைப்பதற்கு முந்தைய நாள் விதை நேர்த்தி செய்யவும். இதனால் உயிர் உரங்களுடன் கலக்க ஏதுவாக இருக்கும்.

### துத்தநாக குறைபாடு

வேளாண்மை துறையினரால் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணூட்டச் சத்து கலவை 5 கிலோ ஒரு எக்கருக்கு மணல் 20 கிலோ கலந்து விதைப்பு முடிந்தவுடன் சீராக தூவ வேண்டும். துத்தநாக குறைபாடு இருந்தால் இலை நரம்புக்கு இணையாக லேசான மஞ்சள் நிறக் கோடுகள் இலையின் பரப்பில் தோன்றும். முதிர்ந்த நரம்பில் பச்சை பற்றாக்குறை மற்றும் நுனிமொட்டு வளர்வது தடை படும். துத்தநாகம் குறைவாக உள்ள மண்ணுக்கு ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும்.

இரும்பு குறைபாடு இருந்தால் நரம்புகளுக்கு இடையே பச்சைய குறைவு, நுனி மற்றும் வேர்களின் வளர்ச்சி குறையும். இரும்புகுறைபாட்டை நீக்க ஒரு சதம் இரும்பு சல்பேட் கரைசலை விதைத்த 30–ம் நாள் தெளிக்க வேண்டும்.

### ஜிப்சம்

போரான் குறைபாடு இருந்தால், இளம் இலைகளின் வளர்ச்சி தடைபட்டு குட்டையான புதர் அமைப்பை தரும். காய் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விதையில்லா காய்களை தரும். போரான் குறைபாடுள்ள மண்ணுக்கு 4 கிலோ போராக்ஸ் மற்றும் 160 கிலோ ஜிப்சம் விதைத்த 45–ம் நாளில் இட வேண்டும்.

ஒரு எக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் வீதம் 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவும், மீதம் 80 கிலோ ஜிப்சத்தை விதைத்த 45–ம் நாளில் இட்டு மண் அணைக்க வேண்டும். மானாவாரி பயிராயின் மழை உரிய நேரத்தில் கிடைக்க பெறாவிட்டால் 70 நாள் வரை ஜிப்சம் இடலாம். ஜிப்சம் இடுவதன் மூலம் பொக்கில்லாத நல்ல திரட்சியான எண்ணெய் சத்து அதிக அளவுடன் கூடிய காய்கள் கிடைக்கும்.

### நீர்பாய்ச்சுதல்

காலநிலையை பொறுத்தும், வளர்ச்சி நிலையை பொறுத்தும் நீர் பாய்ச்ச வேண்டும். முளைப்பு பூத்தல், காய் உருவாதல் ஆகிய பருவங்களில் நீர் பாசனம் இன்றியமையாதது. இந்த நிலையில் மண்ணில் ஈரப்பதம் அவசியம்.

பாசலின் களைக்கொல்லி 800 மில்லி ஒரு ஏக்கருக்கு விதைப்பு முடிந்து 3 நாட்களுக்குள் மண்ணில் ஈரம் இருக்கும் போது தெளிக்க வேண்டும். களைக்கொல்லி தெளிக்கா விட்டால் விதைத்த 20.25 நாளில் கொத்தி கைக்களை எடுக்க வேண்டும்.

---

## நடவுக்கு ஏற்ற தென்னங்கன்றுகளை தேர்வு செய்வது எப்படி?

### ஆராய்ச்சியாளர் விளக்கம்

பொதுவாக உயிரினங்கள் அனைத்துக்கும் கரு உருவாகி அதன் பின்னர் தனது அடுத்த வாரிசு வெளிவர குறிப்பிட்ட காலம் தேவைப்படுகிறது. இதைப் போன்று தென்னங்கன்று வளர 18 மாதங்கள் ஆகும்.

தென்னை மரங்களில் உள்ள பாளை பூ வெடித்து சூல் முடியில் ஒட்டிய மகரந்தப்பொடி சூல் பைக்குள் சென்று கருச்சேர்க்கை ஆவதில் இருந்து 12–வது மாதம் நல்ல விதை தேங்காய் கிடைக்கும். அது முளைத்து வர மூன்று மாதமும் அதில் இருந்து இலைகள் வந்த பிறகுதான் நடவுக்கு ஏற்ற தென்னங்கன்றாக மாறுகிறது. இது முழு தென்னங்கன்றாக உருவாக 18 மாதங்கள் ஆகிறது.

### வளர்ச்சி பருவம்

இந்த தென்னங்கன்றுகளின் வளர்ச்சி பருவங்களை கவனித்தால் ஒரு பகுதி நீளமாகவும், எதிர்புறம் குட்டையாகவும் பார்க்க காகத்தின் மூக்கு போல் தோற்றம் அளிக்கும். இந்த பருவத்தை காக்காமூக்கு கன்று என்று கூறுவார்கள். இதன் நடுப்பகுதி சிறிது வளைவாக காணப்படும். அதை கிளிமூக்கு கன்று என்று கூறுவர். இலை முளைத்த பின்னர்தான் அவை தென்னங்கன்று என்று அழைக்கப்படுகிறது. தென்னங்கன்றுகள் முளைக்க தோன்றியதில் இருந்து 3 மாதங்களுக்குள் 2 அல்லது 3 இலைகள் வந்து விடும். இத்தகைய தென்னங்கன்றுகள் தான் நடவுக்கு சிறந்தது. இதில் இருந்துதான் வீரியம் உள்ள நோய் இல்லாத கன்றுகளை தேர்வு செய்ய முடியும்.

### வேர்விட்டு வீரியமாக

இவ்வாறு இலை விட்டு முளைத்து உள்ள தென்னங்கன்றில் இரு விதையிலை தாவரங்களின் விதை முளைத்து வெளியே வளர்ந்து வரும். அப்போது அதன் இலைகள் இறகு போன்ற தோற்றத்துடன் இரண்டு பக்கமும் செடியுடன் தொங்கிக் கொண்டு இருக்கும். இவ்வாறு ஒரே சமயத்தில் முளைத்த 5 இரண்டு விதை கன்றுகளை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு உள்ள 5 கன்றுகளில் இரண்டு கன்றுகளில் உள்ள இலைகளை பறித்து விட வேண்டும். அதில் ஒன்றை தனியே பிடுங்கி எடுத்து வேறு ஒரு இடத்தில் நடவேண்டும். விதை இலைகளை எடுத்த 2 கன்றுகளிலும், இடம் மாற்றம் செய்த கன்று முளைப்பது கடினம். விதை இலையுடன் கூடிய தென்னங்கன்று வேர்விட்டு வீரியமாகவும், பசுமையாகவும் வளர்வதை காணலாம்.

### நாற்றாங்காலில்....

முறைப்படி பார்க்கும் போது தென்னை மரம் ஒரு விதைஇலைத் தாவரம் ஆகும். தென்னங்கன்றுகளை அதிக காலம் நாற்றாங்காலில் வைத்திருந்தால் விதையிலையில் உள்ள சத்துகளை இழந்து விடுகின்றன. 2 அல்லது 3 வருடங்கள் நாற்றாங்காலில் வைத்திருந்த தென்னங்கன்றுகளை நடும் போது புது வேர்கள் வளர சக்தி இல்லாமல் காய்ந்து விடும். இதன் காரணமாக 3 மாதம் முதல் 4 மாதம் வரை உள்ள தென்னங்கன்றுகள் தான் நடவுக்கு சிறந்தது என்று தெரிந்து கொள்ளலாம்.

**தகவல்:–வா.செ.செல்வம், தென்னை ஆராய்ச்சியாளர், திருவையாறு.**

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,950-3,000

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,000-4,050

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,850-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,650-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 2,013-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புலிகேசவி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 10,500-00
டின் (15கிலோ) 1,750-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,500.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
570-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.24-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வாமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,600 | 68.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4000 | 32.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(30கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.24-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு-

1. வி.797 22எம்.எம் ரூ. 6,749
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7,311
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9912
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,139
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,348
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,545
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 15,747

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.24-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 35-40 |
| கத்தரிக்காய் | ரூ. | 14-18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8-10 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5-7 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 5-7 |
| புடலை | ரூ. | 14-20 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12-18 |
| சுரைக்காய் | ரூ. | 13-15 |
| பாகற்காய் | ரூ. | 8-10 |
| கொத்தவரை | ரூ. | 12-16 |
| பூசணிக்காய் | ரூ. | 8-10 |
| அரசாணிக்காய் | ரூ. | 7-8 |
| மேராக்காய் | ரூ. | 12-16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12-24 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16-20 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20-21 |
| இஞ்சி | ரூ. | 36-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 12-16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-20 |
| சேனைகிழங்கு | ரூ. | 25-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 40-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-22 |
| முள்ளங்கி | ரூ. | 12-15 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-24 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16-20 |
| நூல்கோல் | ரூ. | 18-20 |
| கொத்தமல்லி | ரூ. | 20-24 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 22-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 |
| புதினா | ரூ. | 16-00 |

| | | |
|---|---|---|
| காலிப்பிளவர் | ரூ. | 18-20 |
| பொரியல் தட்டை | ரூ. | 14-18 |
| தேங்காய் | ரூ. | 6-14 |
| பட்டாணி | ரூ. | 60-100 |
| கறிவேப்பிலை | ரூ. | 12-14 |
| அகத்தி | ரூ. | 10-12 |
| வாழைக்காய் | ரூ. | 20-00 |
| குடைமிளகாய் | ரூ. | 28-32 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 17-20 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 50-00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 17-20 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 18-24 |
| காளான் | ரூ. | 80-140 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 11-14 |
| மாங்காய் | ரூ. | 14-20 |
| திராட்சை | ரூ. | 50-00 |
| சப்போட்டா 1கிலோ | ரூ. | 18-00 |
| கொய்யா1கிலோ | ரூ. | 20-00 |
| மாதுளை1கிலோ | ரூ. | 80-90 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 17-00 |
| வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மாம்பழம் | ரூ. | 20-40 |
| ஆப்பிள் | ரூ. | 110-90 |
| சாத்துக்குடி | ரூ. | 36-00 |
| நெல்லிக்காய் | ரூ. | 32-00 |
| ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| வெள்ளரி | ரூ. | 10-28 |
| புளி 1 கிலோ | ரூ. | 75-80 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28-32 |
| அவரை | ரூ. | 12-18 |
| நிலக்கடலை | ரூ. | 26-32 |
| மக்காச்சோளம் | ரூ. | 18-24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 27700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 28,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 29,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9600 |
| கொப்பரை நாடன் | ரூ. 6125 |
| கொப்பரை ராசு | ரூ. 6075 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6300 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 6350 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7450 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 18100 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19200 |
| ரப்பர் பால் | ரூ. 14000 |
| காப்பி | ரூ. 10700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2600 |
| இஞ்சி | ரூ. 1400 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.24-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,680 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1260 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1220 | 77.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.200.00 | அதிகபட்சவிலை | ரூ.286.00 |
| சராசரி விலை | ரூ.183.72 | சராசரி விலை | ரூ.232.80 |
| குறைந்தபட்சவிலை | ரூ.180.00 | குறைந்தபட்சவிலை | ரூ.216.00 |

**பட்டு நூல் ரூ.1,730**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 20,792.00 | 20,792.00 | 20,960.00 |
| ஒரு கிராம் | 2,599.00 | 2,599.00 | 2,620.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 64,460.00 | 68,950.00 | 69,000.00 |
| ஒரு கிராம் | 68.95 | 68.95 | 69.00 |